# செயல் இரகசியம்

ப்ரக்ஞன்



# செயல்
# இரகசியம்

ப்ரக்ஞுன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | செயல் இரகசியம் |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞுன் |
| வகை | : | வேதாந்தம் |
| முதற்பதிப்பு | : | **2018** |
| வெளியீடு | : | பராபரம் |
| பக்கங்கள் | : | 45 |
| தாள் | : | A5 (5.83" X 8.27") |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அகவிழிப்பு |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 05 |
| 1. | செயல் இரகசியம் | 09 |
| 2. | பிரபஞ்சமும், ஒழுங்கும் | 18 |
| 3. | செயல்களும், வகைகளும் | 21 |
| 4. | செயல்களும், பலன்களும் | 24 |
| 5. | செயல்களும், மறுப்பிறப்பும் | 27 |
| 6. | மூன்று செயல்பிரிவுகள் | 31 |
| 7. | செயல்பலன்களும், பிறவாமையும் | 37 |

# முன்னுரை

அவரவர் வினை வழி, அவரவர் அனுபவம் என்பது முன்னோர்களின் கருத்து. இதில், இதுவரை நாம் பெற்ற அனுபவம் நம்மை இன்று எப்படி வைத்திருக்கின்றது என்பதிலிருந்தே, நாம் வாழும் வாழ்க்கை முறை தெரியும்.

வினை என்பது, செய்யும் செயல் ஆகும். நாம் செய்யும் செயல்களை வைத்தே நம்மை மதிப்பீடு செய்வார்கள். இன்று செய்கின்ற செயலை வைத்தே, நாளைய பலனைப் பார்க்க முடியும்.

> "தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்பது முதுமொழி.

அதாவது, நாம் எதை விதைக்கின்றோமோ? அதையே அறுவடை செய்ய முடியும். மேலும் இந்த இயற்கையின் நியதிப்படி, இந்த பூமியில் நாம் எதை விதைத்தாலும், அதனைப் பலமடங்கு பலனாகத் திருப்பிக் கொடுக்கும் உயரியத் தன்மை கொண்டது இந்த இயற்கை.

அதனால்தான், நாம் ஒரே ஒரு மாங்காய் அல்லது ஒரே ஒரு தேங்காய் விதையை இந்த பூமியில் உள்ள மண்ணில் விதைத்து, சில காலங்கள் கழித்துப் பார்த்தால், அதில் பல நூற்றுக் கணக்கான மாங்காய்களும், தேங்காய்களும் காய்த்து இருப்பதைக் காண்கின்றோம்.

அதாவது, இந்த இயற்கை ஒன்றுக்கு பல மடங்கு காய்களைப் பலனாகத் நமக்குத் திருப்பிக் கொடுக்கின்றது. இதுதான் இயற்கை நமக்கு கொடுக்கும் கொடை.

அதுப்போல, இந்த பூமியில் நாம் செய்கின்ற ஒரே ஒரு செயல் நல்லதாக இருப்பின், சில காலங்களிலேயே நமக்கு அதன்பலனாக பல நல்ல செயல்கள் நம்முடைய வாழ்க்கையில் நடைப்பெறுவதையும் காணலாம். அதுவே, நாம் செய்கின்ற ஒரே ஒரு செயல் தீமையாக இருப்பின், சில காலங்களிலேயே நமக்கு அதன் பலனாகப் பல தீய செயல்கள் நம் வாழ்க்கையில் நடைப்பெறுவதையும், நம்முடைய நேரடி அனுபவத்தில் கண் கூடாகக் காணலாம்.

ஆக, இதில் ஒரே ஒரு செயலுக்கே இப்படி பல மடங்கு பலன்கள் என்றால், பலவாறான நல்ல செயல்களை அல்லது பலவாறான தீய செயல்களை நாம் செய்யும் பொழுது, அதன் பலன்களாக நல்லதும், கெட்டதும் பல மடங்குகள் நமக்குத்

திரும்பக் கிடைக்கும். இதை நாம் மறந்து விடக்கூடாது. இதுவே இயற்கையின் நியதி ஆகும்.

ஆகவே, நாம் செய்கின்ற செயல் நல்லதா? அல்லது கெட்டதா? என்பதை, அந்த செயலினால் கிடைத்த பலன்களை வைத்தே அதை நாம் நன்கு அறிந்துக் கொள்ளலாம். மேலும், நமக்கு எது துயரத்தைத் தருகின்றதோ? அதை நாமும் மற்றவர்களுக்கும் செய்யாமல் தவிர்க்க முயற்சிக்க வேண்டும்.

ஆக, ஒருவன் ஒரு செயலைச் செய்வதற்கு முன்பு, அதன் பின்விளைவுகளையும், பலன்களையும் கருத்தில் கொண்டு செயல்பட்டால், அந்த செயல்கள் மற்றவர்களுக்கு நல்ல வகையில் பயன்பட்டு, அதன்பலனாக மற்றவர்களுக்கும், நமக்கும் பல மடங்கு நன்மைகள் திரும்பக் கிடைக்கும் என்ற புரிதல் நம்மிடத்தில் வரவேண்டும்.

ஆகவே, ஒருவன் செயல்களை செய்யத் தொடங்கும் போது, எதைப் பற்றியும் கவலைப்படாமல், மனம் போன போக்கிலே, பல தவறான செயல்களைச் செய்தால், அதன் விளைவாக கிடைக்கின்ற தீய பலன்களையும், அவன் அனுபவிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

இதைத்தான் நம் பெரியவர்கள் அன்று முதலே, நம் அனைவருக்கும் கூறி வருகின்றார்கள்.

**”முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்”** என்றார்கள்.

ஆகவே, நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும், அந்த செயலைச் செய்ய தூண்டுகின்ற மனதையும் கண்காணித்து, அதை, சரியாக வழிநடத்திச் செல்ல, நமக்கு நன்மை, தீமை களைப் பகுத்தறியக்கூடிய விவேகம் இருக்க வேண்டும்.

இது எவ்வாறு என்பதை சாதாரண பாமரனும் படித்துப் புரிந்துக் கொள்ள ஏதுவாக, இந்த புத்தகத்தின் வாயிலாக, **“செயல் இரகசியம்”** வெளிப்படுகின்றது.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# 1. செயல் இரகசியம்

செயல்கள் என்பது, நம் மனதின் பதிவுகளின் அடிப்படையில் அமைகின்றது. அதாவது, நம் மனதில் நாம் ஏற்கனவே, பதிந்து வைத்துக் கொண்டுள்ள பல்வேறு எண்ணங்களின் தூண்டுதலைக் கொண்டு செயல்கள் அமைகின்றன.

மேலும், அவைகள் நம்முடைய முந்தைய நடத்தை முறைகளின் அடிப்படையில்தான், நாம் பேசவும், செயல்படவும் கூடிய, விசய, சுகங்களாக நம் சித்தத்தில் சேகரிக்கப்பட்டு, சரியான சூழலில், அவைகள் மீண்டும் மனதினால் தூண்டப்பட்டு, அதனையே நாம் செயலாகச் செய்கின்றோம்.

சுருக்கமாகச் சொன்னால், நாம் ஏதோ செய்ய வேண்டும் என நினைக்கிறோம். பிறகு அதையே கட்டாயமாகச் செயலாகச் செய்கிறோம்.

இது நம்முடைய மனதின் தூண்டுதல் என்றாலும், அவ்வாறு அந்த மனதின் தூண்டுதலினால் வெளிப்பட்ட செயல் விளைவுகள் என்பது, அறிவியல் அறிஞர் **சர் ஐசக் நியூட்டன்**

அவர்களின் விதிப்படி பார்க்கும்போது, பொதுவாகவே, **“ஒவ்வொரு வினைக்கும், அதற்கு இணையான எதிர் வினை உண்டு."** என்று அறியப்படுகின்றது.

அவ்வாறே, ஆன்மீக ரீதியிலே ஒரு கதையாகப் பார்க்கலாம். பாரத தேசத்திலே பிறந்து, மிகப்பெரிய உயரிய சித்திகளைப் பெற்ற **‘சிலாதர்’** என்ற ஒரு ரிஷி யம லோகத்தை சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டார்.

அதை தன் தவ வலிமையால், யம தர்ம ராஜனிடம் கோரிக்கையாக வைத்தார். அவரது கோரிக்கையை ஏற்ற யம தர்மன் அவரது ஆசைக்கு செவி சாய்த்து, ஐயா! தாங்கள் தனியாக யம லோகத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றால், இங்கு என்ன நடக்கின்றது என்று தங்களுக்குத் தெரியாது. ஆகவே, **“நான் தங்களுடன் சித்திரகுப்தனை அனுப்பி வைக்கின்றேன்”** என்றார். அதோடு, சித்திரகுப்தனையும், அந்த ரிஷியுடன் யம லோகத்தைச் சுற்றிப் பார்க்க அனுப்பி வைத்தார்.

யம லோகம் விசித்திரமானது. அங்கே நடக்கும் ஒவ்வொரு காரியத்துக்கும் உண்டான தண்டனைகள் என்பது, பாரபட்சமற்ற நீதி, நிலை நிறுத்தப்படும் வகையில், தர்மம் காக்கப்பட்டு, தர்மராஜனின் சட்டத்தைப் பார்க்கப் பார்க்க, அந்த ரிஷி ஆடிப்போனார்.

அதாவது, ஒவ்வொருவரின் செயல் விளைவுகளுக்கு ஏற்ற தண்டனைகளுக்கான காரணங்களில், அத்தனை துல்லியம் அங்கு இருந்தது.

*‘இப்படி நரகம் என்று ஒன்று இருப்பது தெரிந்தும், தண்டனை கிடைக்கும் என்பதை அறிந்தும், ஏன் இந்த மனிதர்கள் பாவங்களைச் செய்கிறார்கள்?’* என நினைக்க நினைக்க அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால், அங்கு மனிதர்கள் தங்களின் பாவங்களுக்காக அனுபவிக்கும் கொடூர தண்டனைகளைக் கண்டு அவர் மனம் சஞ்சலம் கொள்ள வில்லை.

அதற்குக் காரணம், அவர் பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்ட, அனைத்தையும் கடந்த, சித்தி பெற்ற முனிவர் என்பதினால், அவர் அதைப்பற்றி கவலைப்படவில்லை.

அதேசமயம் அவருக்கு சந்தேகம் எழும் இடங்களில் எல்லாம் சித்ரகுப்தனைத் திரும்பிப் பார்ப்பார்.

அவரின் மனக் குறிப்பை உணர்ந்த சித்ரகுப்தன் உடனே அவருக்கு அங்கு இருப்பதை அனைத்தையும் எடுத்து விளக்குவார்.

இவ்வாறு, இருவரும் நடந்துவரும் வழியில், ஓர் இடத்தில் ஐந்தடி உயரத்துக்கு கற்பாறை ஒன்றைக் கண்டார் முனிவர்.

*“இது என்ன கற்பாறை?”* என்றார்.

*“ஒன்றுமில்லை மகாமுனி! இது ஒரு சிறுவனின் பாவம். இப்படி வளர்ந்து நிற்கிறது’’* என்றார் சித்திரகுப்தன்.

*“சிறுவன் செய்த பாவமா? அது என்ன பாவம்?’’* என்றார் முனிவர்.

பூலோகத்தில் ஒரு முனிவரின் ஆசிரமத்துக்கு தினமும் பல விருந்தினர்கள் (அதிதிகள்) வருவது வழக்கம். முனிவரும் வருபவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று, உபசரித்து உணவு அளிப்பார்.

அந்த முனிவருக்கு ஒரு பிள்ளை இருந்தான். அந்தப் பிள்ளை மிகவும் சேட்டைக்காரன்.

அத்துடன் செல்லமாகவும் வளர்க்கப்பட்டவன். அதனால், எப்போதும் ஏதாவது குறும்புகள் செய்துக்கொண்டே இருப்பான்.

அதனால், அவரது ஆசிரமத்திற்கு விருந்தினர்களாக வருபவர்களுக்கு, அந்த முனிவர் பரிமாறும் உணவில், வேண்டுமென்றே சிறு, சிறு கற்களைப் போட்டு, அவர்கள் சாப்பிடும்போது, அவர்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து ரசித்து மகிழ்வான்.

அப்படி, அவன் விருந்தினர்களுக்குச் செய்த பாவங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, ஒரு பெரிய பாறையாக மாறி, இப்படி வளர்ந்து நிற்கிறது. அவனது விதி முடியும் நேரத்தில், அவன் யம லோகத்துக்கு வரும்போது, இந்தப் பாறையை அவன் உணவாக உண்ண வேண்டும். இதுதான் அவனுக்கான தண்டனை என்றார் சித்ரகுப்தன்.

அதைக் கேட்டு, அசந்துபோனார் முனிவர்.

மேலும், இருவரும் நடந்தார்கள். முனிவருக்கு அந்தச் சிறுவன் யார் என அறிந்துக்கொள்ள ஆர்வம் எழுந்தது. இது எங்கோ தன் வாழ்க்கையிலேயே நடந்தவைகளாகத்தான் அவருக்குள் ஒரு நினைவு நிழலாட்டம் ஆடியது.

ஆனால், சித்ரகுப்தனிடம் கேட்கத் தயக்கம். அவர் வேறு பக்கம் சென்றதும், ரிஷி தன் ஞான திருஷ்டியில் அந்தச் சிறுவன் யார்? எனப் பார்த்தார்.

அது வேறு யாரும் அல்ல! அவரேதான்.

அதனால், தன் தவறை உணர்ந்த அந்த ரிஷி, யமதர்ம ராஜனிடம் சென்று நடந்ததைச் சொன்னார். *“யமதர்மா! நான் முக்தி பெற்று இறைவனடி சேர விரும்புகிறேன். அதற்குத் தடையாக நிச்சயம் இந்தக் கல் இருக்கும். எனவே, இந்த ஜன்மத்திலேயே அந்தப் பாவத்தைப் போக்க விரும்புகிறேன். நானே கொஞ்சம் கொஞ்சமாக இந்தக் கல்லை தின்று செரித்து விடுகிறேனே’’* என்றார்.

அந்த முனிவரின் நியாயமான கோரிக்கையை யம தர்மன் ஏற்றான். கல்லைச் சிறிது சிறிதாக அரைத்து உண்டார் அந்த முனிவர். ஆக, யாராக இருந்தாலும், செய்யும் செயல் விளைவுகளுக்கான பலனைக் கட்டாயம் அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும். அது, நல்லதோ? கெட்டதோ? கட்டாயம் அதற்கான பலன்கள் உண்டு.

**‘சிலா’** என்றால், **கல்** என்று பொருள். அந்த கல்லை உண்டவர் என்பதால், அந்த முனிவர் அன்று முதல், **‘சிலாதர்’** என்று அழைக்கப்பட்டார்.

ஆக, எத்தனை தவ சக்திகள் பெற்றவராக இருப்பினும், ஞானம் பெற்றவராக இருப்பினும், ஒருவர் பிறருக்குச் செய்யும்

தீமைகள் அவரைச் சும்மா விடாது. அதற்கான பலனை அவர்கள் அனுபவித்துத்தான் கழிக்க வேண்டும்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் தர்மத்துடன் நடக்க வேண்டும். ஆசையின் காரணமாக, அதர்ம வழியில் செல்லாமல், நமக்குக் கிடைத்துள்ள பகுத்தறிவினால், நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து, நல்ல வழியிலே வாழ முற்பட வேண்டும். அறியாமையினால், பல தவறான காரியங்களைச் செய்யும்போது, அவைகள் அனைத்தும் பாவக் கர்ம வினையாக வளர்ந்துக்கொண்டே போகும். ஒருநாள் ஒட்டுமொத்தமாக அவைகள் திரும்பக் கிடைக்கும். இதுவே, இயற்கையின் நியதி.

இதை உணர்ந்தவர்கள் ஒரு எறும்புக்குக்கூட தீங்கு விளைவிக்க நினைக்க மாட்டார்கள்.

மேலும், அறியாமையினால் பல்வேறு பாவச் செயல்களைச் செய்துவிட்டு, அதற்கு பரிகாரமாக எத்தனை யாகங்கள், ஹோமங்கள், தவங்கள், இறைவழிபாடு என என்ன செய்தாலும், அவர்கள் செய்த செயல் விளைவுகளை அனுபவிக்காமல் தப்பிக்க முடியாது. இதுவே, **“கர்மா”** அல்லது **‘செயல் □ரகசியம்’** ஆகும்.

ஆகவே, நாம் செய்யும் செயல்களில் இருந்து நம்மை நாமே தற்காத்துக் கொள்ள வேண்டுமானால், அதற்கான ஒன்பது வகையான விதிகளை, நாம் ஒவ்வொருவரும் அவசியம் அறிந்திருக்க வேண்டும்.

அவைகள்,

**முதல் விதி:–** இந்த உலகத்தில் நாம் எதைச் செய்தாலும் அது நமக்கே திரும்பி வந்து சேரும்.

**இரண்டாம் விதி:–** வாழ்வில் எதுவும் அதுவாக நடப்பதில்லை . நமக்குத் தேவையானதை நாம்தான் நடத்திச் செல்ல வேண்டும்.

**மூன்றாம் விதி:–** சிலவற்றை ஏற்றுக்கொண்டால் மட்டுமே மாற்றம் நிகழும்.

**நான்காம் விதி:–** நம்மை நாம் மாற்றிக் கொள்ளும் போதுதான், நம் வாழ்க்கையும் நம்மை பின்பற்றி மாறும்.

**ஐந்தாம் விதி:–** நம் வாழ்க்கையில் நடப்பவற்றிற்கு நாமே பொறுப்பு என்பதை உணர வேண்டும்.

**ஆறாம் விதி:–** நேற்று, இன்று, நாளை ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது.

**ஏழாம் விதி:–** ஒரு சமயத்தில் இருவேறு விஷயங்களைப் பற்றி சிந்திக்க முடியாது.

**எட்டாம் விதி:–** நம் நடத்தை நமது சிந்தனையையும், செயலையும் பிரதிபலிக்க வேண்டும்.

**ஒன்பதாம் விதி:–** நம்முடைய கடந்த காலத்தையே நாம் பார்த்துக் கொண்டிருந்தால், நம்முடைய நிகழ்காலம் நம்மை விட்டுப் போய்விடும்.

# 2. பிரபஞ்சமும், ஒழுங்கும்

ஒருவன் தன் வாழ்வின் உயர் இலட்சியமாகக் கொள்ள வேண்டியது **ஒழுக்கம்** மட்டுமே ஆகும்.

இதனையே,

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

என்கின்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

ஏன் ஒழுக்கத்தைப் பற்றி இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பார்த்தால், ஒருவன் செய்யும் செயல்கள் அனைத்துமே, அவனது ஒழுக்கத்தை அடிப்படை யாக வைத்தே அமைகின்றது.

இந்தப் பிரபஞ்சத்தில் இயற்கையின் நியதிப்படி செயல் பட்டுக் கொண்டிருக்கின்ற அனைத்தும், தனக்குள் ஒரு ஒழுங்கை அல்லது ஒழுக்கத்தை வைத்துக் கொண்டு செயல் படுகின்றது.

அதனால்தான், அனைத்து கோள்களும் தனக்கென கொடுக்கப்பட்ட பாதையில் தன்னைத்தானே சரியாகச் சுற்றி வருகின்றன. இதுப்போல நாம் வசிக்கும் இந்த பூமி சரியாகச் சுற்றுவதினாலேயே, தினசரி சூரியன் கிழக்கே உதித்து, மேற்கே மறைகின்றது. மேலும், நான்கு விதமான பருவ கால மாற்றங்கள் நடைமுறையில் சரியாக உள்ளது.

இதுப்போல, எண்ணிக்கையில் அடங்காத அனுதினச் செயல்களை இந்த பிரபஞ்சம் தன்னுள் ஒழுங்கு மாறாமல், ஒரு ஒழுக்க நியதியுடன் செயல்படுத்திக் கொண்டு வருகின்றது.

இந்தப் பிரபஞ்சம் எதை சரியென்று ஏற்கின்றதோ? அதுவே, **ஒழுக்கம்** அல்லது **ஒழுங்கு** என்பதாகும்.

இந்த பிரபஞ்சத்தின் ஒழுங்கு நடவடிக்கையில் சிறிது மாற்றம் நிகழ்ந்தாலும், அனைத்திற்கும் அழிவு உண்டாகிவிடும். அதாவது, அவைகள் வேறு ஒரு பரிமாணத்திற்கு மாறிவிடும்.

அதன்காரணமாக, இந்த பிரபஞ்சத்தின் ஒரு துகளான இந்த பூமியில் வாழும் மனிதன் தன்னுடைய ஒழுங்கில் மாற்றத்தை ஏற்படுத்தினான் என்றால், அவனது அழிவுக்கு அவனே காரணம் ஆகின்றான்.

எனவே, ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்தை மிகவும் முன்னிலை படுத்தி செயல் புரிதல் அவசியம் ஆகின்றது.

ஒருவனது ஒழுக்க நடவடிக்கைகளில் காணப்படுகின்ற ஒழுங்குதான் அவனது புலன்களை சரியான வழியில் கொண்டு செல்லவும், அவனது மனதை நற் சிந்தனைகளுக்கு திருப்பவும் கூடிய முறையில் வழி நடத்துகின்றது.

ஐம்புலன்களின் வாயிலாக அனைத்தையும் அறிய முயலும் ஒருவன், ஐம்பூதங்களால் ஆன உடலின் செயல் விளைவுகளின் ஒழுங்கினால்தான், அந்தப் புலன்களை ஒடுக்கி ஒழுக்கமுடையவனாக மாறுகின்றான்.

ஐம்புலன்கள் என்பது, படைக்கப்பட்ட மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானவைகள். இந்த ஐந்து புலன்களின் வாயிலாகத்தான் ஒருவன் இந்த பிரபஞ்சத்தை அறிகிறான்.

அதாவது, கண்கள் மூலமாகக் காண்கிறான், காதுகள் மூலமாகக் கேட்கிறான், மூக்கு மூலமாக மணத்தை முகர்கிறான், நாக்கு மூலமாக சுவைக்கிறான், மற்றும் சருமம் மூலமாக தொடு உணர்ச்சியை அறிகிறான். ஆக, இந்தப் புலன்கள் ஒழுங்கான முறையில் செயல்படுவதினால் மட்டுமே, ஒருவன் அனைத்தையும் அறியமுடியும்.

# 3. செயல்களும், வகைகளும்

இந்த பிரபஞ்சத்தில் உள்ள ஐந்து பூதங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மற்றும் நிலம் போன்றவைகள் தன் இயல்பான செயல்களிலிருந்து, சற்று நிலை மாறினாலும், அதன் விளைவுகளை, இந்த பூமியில் இயற்கைச் சீற்றமாக நாம் காண்கின்றோம்.

அதுப்போல, மனிதனும் தன் இயல்பான ஒழுங்கு நிலையிலிருந்து மாறுபட்டு செயல் செய்தான் என்றால், அதன் விளைவாக, அவன் விட்டிலுள்ள மனைவி அல்லது மற்றவர்கள் சீற்றத்திற்கு ஆளாக வேண்டும் என்பதையும் புரிந்துக் கொண்டு, நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் மிகுந்த முன் எச்சரிக்கையுடன், மற்றவர்களுக்கும், நமக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தாதவாறு மிகுந்த முன் எச்சரிக்கையுடன் செயல் செய்யவேண்டும்.

படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களும் செயல் செய்யத்தான் விளைகின்றன. ஆனால், எத்தகைய செயல் செய்வது, எத்தகைய செயல் செய்யக்கூடாது என்பதை

அவையவைகளுக்கு கொடுக்கப்பட்ட சுய அறிவின் அடிப்படை யிலேயே அவைகள் அறிகின்றன.

அதிலே, மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் தன்னுடைய உணவு, குடும்பம் மற்றும் உறைவிடம் போன்ற அத்தியாவசியத் தேவைக்காகச் செயல் புரிந்தாலும், இதில் தன் சுய தேவைகளை விட, மற்ற உயிரினங்களுக்கு நன்மைகள் செய்யும் செயல்களையே அவைகள் பெரும்பாலும் தங்களிடம் வெளிப்படுத்துவதைக் காண முடிகின்றது.

அதாவது, ஒவ்வொரு உயிரினமும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கின்றன. உதாரணமாக, செடி, கொடிகள், போன்றவை தன்னுடைய செயலால் பல உயிரினங்களுக்கு உணவாகவும், உயிர் காக்கும் மருந்தாகவும் பயன்படுகின்றன.

அதுப்போல, மரங்களும் தன்னுடைய பங்கிற்கு மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் தேவையான உணவாக பழங்களை தருகின்றன. மேலும், மற்ற உயிரினங்கள் முதற்கொண்டு மனிதன் வரை உயிர் வாழத்தேவையான, பிராணவாயுவை சரியாகப் பெறவேண்டி, தொழிற்சாலை மற்றும் மோட்டார் வாகனங்களினால் வெளிவிடப்படும் மாசு கலந்த கரியமில வாயுவை தான் பெற்றுக் கொண்டு, நல்ல சுத்தமான பிராண வாயுவை

மனிதனுக்கு சுவாசிக்க வழங்குகின்றன. அதாவது, மனிதன் தடையின்றி, சுத்தமாக சுவாசிக்க வேண்டும் என்பதற்காக, மாசு அடைந்து வரும் வளி மண்டலத்தை காப்பாற்ற, அதில் கலந்துள்ள கரியமில வாயுவை மரங்கள் சுத்தம் செய்கின்றன.

அதுப்போலவே, தேனீ, வண்டு போன்ற பூச்சி இனங்கள் தாவர இனப்பெருக்கத்திற்கு தேவையான மகரந்தச்சேர்க்கை நடைபெறவும், மேலும், மலர்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற உணவுத் தேவைக்கும் உதவி புரிகின்றன.

பறவைகள் பல விதமான தாவரங்களின் காய்கறி களையும், பழங்களையும் உணவாக உட்கொண்டு, அதன் எச்சங்களாக அந்த, அந்த தாவரங்களின் விதைகளை பூமியில் பரவச்செய்து, அந்த விதைகளினால் உண்டான புதிய விருட்சங்களினால், மற்ற உயிரினங்கள் உயிர் வாழத் தேவையான மழை, காற்று மற்றும் உணவைக் கிடைக்கச் செய்கின்றன.

இதுப்போல எண்ணற்ற ஜீவராசிகள் தனக்கென ஒரு நோக்கமுமின்றி, பிறருக்காக இந்த உலகத்தில் பலவிதமான நற்செயல்களைச் செய்கின்றன.

# 4. செயல்களும், பலன்களும்

மனிதனைத்தவிர மற்ற உயிரினங்களின் செயல்களின் நன்மை, தீமைகளை தீர்மானிக்கு உரிமையை ஈஸ்வர சித்தமாகிய பிரபஞ்சம் தன்வசம் வைத்துக் கொள்கின்றது. மேலும், அவைகளினால் இந்தப் பிறவியில், தற்போது செய்யப்படும் செயல்களினால் ஏற்படும் நன்மை, தீமைகளுக்கு உண்டான பலன்களை பிரபஞ்சம் எப்போதுமே கொடுக்காது. அதற்குக் காரணம், அவைகள் மனிதனைப் போன்று, நன்மை, தீமைகளைப் பகுத்தறியும் சுய அறிவைப் பெற்றிருக்கவில்லை. அதனால், அவைகளின் நன்மை – தீமைகளுக்குண்டான இந்தப் பிறவியின் பலன்கள் அவைகளுக்கு உண்டாகாமல், அவைகள் ஏற்கனவே கொண்டு வந்த கர்ம வினைகளை மட்டுமே அனுபவித்து இந்தப் பிறவியை முடிக்கின்றது.

அதேசமயம், மனிதன் தான் செய்கின்ற செயல்களினால் விளையும், நன்மை மற்றும் தீமைகளுக்கு அவனே முழு பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குக் காரணம், மனிதன் மற்ற உயிரினங்களுக்கு கிடைக்காத நன்மை, தீமைகளைப் பகுத்தறியும் ஆறாவது அறிவு பெற்றுள்ளதால், அவனது ஒவ்வொரு செயல் விளைவுகளின் பலா பலன்களை

அவனே அனுபவிக்க வேண்டும் என்பதுதான் பிரபஞ்சத்தின் நியதி.

ஆக, இதிலிருந்து மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும், கிடைக்கின்ற செயல் விளைவுகளின் பலன்களை அவனே அனுபவிக்க உரிமை உள்ளதால், அவன் செய்கின்ற செயல்கள் நல்லதாக இருந்தால், அதன் பலனாக அவன் நன்மையையும், கெட்டதாக இருந்தால், தீமையையும் அவசியம் அனுபவிக்க வேண்டும்.

மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலும், இந்தப் பிரபஞ்சத்தின் ஒழுங்கு நியதிக்குள் உள்ளடங்கியதாக உள்ளதால், அவன் செய்யும் செயல் விளைவுகளை இரண்டாகப் பிரித்து, அவைகளைப் “புண்ணியச்செயல்கள்” என்றும், “பாவச்செயல்கள்” என்றும் கூறி, அதை மனிதன் முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்ற சட்டத்தை வகுத்து வைத்துள்ளது. அதைத்தான் **ரிதம்** என்று சாஸ்திரம் கூறுகின்றது.

ஆக, இந்தப் பிரபஞ்சம் தன்னிடம் உள்ள ஒழுங்கு நியதியின் அடிப்படையில், அவரவர்கள் செய்யும் செயல் விளைவுகளின் பலா பலன்களை, மூன்று விதமாகக் கொடுத்து, அதை அவன் அனுபவித்து கழிக்க வேண்டிய கட்டாயத்தின்

அடிப்படையில், அதற்கான உடல்களையும் புழு, பூச்சிகள், ஊர்வன, பறவைகள், மிருகங்கள் மற்றும் மனிதர்கள் என பலவாறாக உண்டாக்குகின்றது.

இவ்வாறு, இயற்கையினால் கொடுக்கப்பட்ட பாவ, புண்ணிய பலன்களை அனுபவிக்க வேண்டிய மனிதன் அவனது இந்தப் பிறவியில், அவனது ஆயுள் காலம் முடிவதற்குள் கொடுக்கப்பட்ட இந்த உடலின் வாயிலாக, அந்தப் பலன்களை முழுவதுமாக அனுபவிக்க முடியாமல், இடையிலேயே மரணத்தை தழுவினால், மீதமுள்ள அவனது செயற்பலன்களுக்கு ஏற்பவும், இந்தப் பிறவியில், அவன் செய்த செயல் விளைவுகளின் தற்போதைய புதிய பலன்களையும், இனிவரும் வேறு ஒரு உடலின் வாயிலாக மீண்டும் அனுபவிக்க, அவனுக்கு மறுபிறவி கொடுக்கப்படுகின்றது.

ஆகவே, மனிதப் பிறவியின் மகத்துவம் அறிந்து, கிடைக்கப்பெற்ற பகுத்தறிவைக் கொண்டு, அறியாமைகளை அகற்றும் "ஆன்மவியல்"கல்வியின் வாயிலாகப் பாடங்களைப் படித்து, தன்னைப் பற்றியும், இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும், இதற்கெல்லாம் ஆதாரமான ஆன்மாவைப் பற்றியும் ஒரு உயர் ஞானத்தை அடையாமல், அவனது செயல் விளைவுகளினால் உண்டான பலன்களை அவனால் தீர்க்க முடியாது.

# 5. செயல்களும், மறுபிறப்பும்

தனித்த மனித மனதினால் உண்டான தூண்டுதல்கள் காரணமாக, ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் செயல் விளைவுகளின் பலன்களை பிரபஞ்சம் எனும், ஒட்டுமொத்த மனமாகிய ஈஸ்வர சித்தத்தில் சேகரிப்பதின் நோக்கம், மனிதர்கள் ஒவ்வொருவரும் செய்யும் செயல் விளைவுகளின் பலன்களை, அவரவர்கள் செய்த செயல்களுக்கு ஏற்ப தனித்தனியாகப் பிரித்துக் கொடுக்க வேண்டியும், அவர்கள் அவைகளை முழுவதுமாக அனுபவித்து தீர்க்க வேண்டியும் அவ்வாறு சேகரித்து வைத்துக் கொள்ளப்படுகின்றது. இதைத்தான் காரணத் தேகம் என்கின்றோம். இதைத்தான் சாஸ்திரம் "சஞ்சித கர்மா" என்று அழைக்கின்றது.

மேலும், அந்த ஒட்டு மொத்த கரம பலன்களை மனிதன் அனுபவிக்க, அவனுக்கு பரு உடல் தேவைப்படுகின்றது என்பதினால், அவனுக்கு கொடுக்கப்படுகின்ற அந்த உடல், அவன் செய்த செயற்பலன்களின் சூக்ஷும உடலின் அடிப்படையில் பிரபஞ்சத்தினால் பஞ்ச பூதங்களைக் கொண்டு உருவாக்கப்படுகிறது.

இதிலிருந்து நாம் அறிய வேண்டிய உண்மை வெளிப்படுகின்றது.

அதாவது, பல்வேறு உடற்கூறுகளுடன், பலதரப்பட்ட உயிரினங்கள் இந்த பிரபஞ்சத்தில் காணமுடிகின்றது.

பிரபஞ்சத்தின் படைப்பில் இந்த ஏற்றத்தாழ்வுகளை காணும் பொழுது, ஓரறிவு படைத்த உயிரினம் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை, அவைகள் அனுபவிக்கும் பலன்களும் மாறுபடுகின்றது.

அனைத்து வகைகளிலும் சிறப்பாகச் செயல்படும் மனிதனை படைத்த அதே பிரபஞ்சம், அவனைவிட கீழான மற்ற உயிரினங்களை படைக்க வேண்டிய அவசியமும், அல்லது மனிதனிலேயே மிகவும் சந்தோஷ சூழலில் வாழும் ஒருவனையும், அதிகத்துயரத்தை கொண்ட உடல் ஊனமுற்ற ஒருவனையும் படைக்கவேண்டிய அவசியமும் இப்பொழுது புரிகின்றது.

இந்த வேற்றுமைக்கு காரணம் என்ன?

இந்த வேற்றுமைகளுக்கு உண்டான உண்மைக் காரணத்தை பிரபஞ்சம் வெளிப்படுத்துகின்றது.

அதுதான், அவனவன் செய்த செயல்களின் பலனுக்கு ஏற்ப, அந்த பலன்களை அவன் அனுபவிக்க, அவனுக்கு உடல் கொடுக்கப்படுகின்றது.

அந்த உடல், இந்தப் பிறவியில், அவன் எந்த வகைப்பலன்களை அனுபவிக்க வேண்டும் என்பதைப் பொருத்து, உடல் தேர்ந்தெடுக்கப்படுகின்றது.

இந்தப் பிறவியில், அவன் மனிதனாகப் பிறந்து, முற்பிறவிப் பலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதே, இந்தப் பிறவியில் அவன் செய்கின்ற புதிய செயல் விளைவுகளுக்குண்டான பலன்களை, அவன் மீண்டும் அனுபவிக்க வேண்டி, அடுத்தப் பிறவி என்று ஒன்றை, அவன் ஏற்கனவே செய்த செயல் பலன்களின் அடிப்படையில், அதற்கேற்ற உடலாகக் கொடுத்தால்தான், அவன் அதை அனுபவித்து கழிக்க முடியும் என்று பிரபஞ்சம் அதற்கான உடலைத் தேர்ந்தெடுக்கின்றது.

அதன்காரணமாக, அவனது கீழான பலன்களை அனுபவித்துத் தீர்க்க, கீழான மிருகங்கள் போன்ற பிறவிகள் எடுத்து அவன் தீர்க்க முயலவேண்டும்.

ஆனால், அந்த மிருகப் பிறவியில் அவன் செய்யும் செயல்களின் பலன்களுக்கு பாவ, புண்ணியங்கள் கிடையாது என்பதினால், அவன் முற்பிறவியில் செய்த பாவத்தை மட்டுமே கழிக்க, அந்த மிருகத்தின் உடலை பயன்படுத்தி முடித்துவிட்டு, மீண்டும் அவன் ஏற்கனவே சேமிப்பில் மீதி வைத்துள்ள, பாவ புண்ணியங்களின் அடிப்படையில் அவன் மற்றொரு உடல் எடுக்க வேண்டிய நிர்பந்தமும் உள்ளது.

இவ்வாறு பிறவிச் சக்கரத்தில் மாட்டிக்கொண்டு மனிதன் பிறப்பதும், இறப்பதுமாக சிக்கித்தவிப்பதை தவிர்க்க வேண்டும் என்று, தன்னைப் பற்றிய முழுமையான ஞானத்தை அடைந்த ஞானிகள் உபதேசிக்கின்றார்கள்.

# 6. மூன்று செயல் பிரிவுகள்

ஆசைகளின் உந்துதலினால், மனம் போனபடி செயல்படுகின்ற மனிதன், அந்த செயலின் நன்மை, தீமைகளை ஆராயாமல் செய்யும், ஒவ்வொரு செயலுக்கும், பலன் அளிப்பதற்காக, இந்த பிரபஞ்சம் அந்த செயல்களை மூன்று பிரிவுகளாக தன்னுள் பதிய வைத்துக் கொள்கின்றது.

மனிதனின் செயல்களை (1) சேமித்த செயல்பலன், (2) செயல்படுகின்ற செயல்பலன், மற்றும் (3) இனி வர இருக்கின்ற செயல் பலன் என மூன்று வகைகளில் இந்தப் பிரபஞ்சம் தன்னுள் சேமித்து வைத்துக்கொண்டு, அவனவன் செய்த செயல்களின் பலன்களை காலம் வரும்பொழுது, அவரவர்கள் பலன்களுக்குத் தக்கபடி, அவர்களுக்குத் தேவையான உடலைத் தேர்ந்தெடுத்து, அந்த பலன்களை அதை அல்லது அவர்களை அனுபவிக்க வைக்கின்றது.

இதில் இந்த மூன்று செயல் பிரிவுகளும் மனிதர்களுக்கு எப்படி பலன் அளிக்கின்றது என்பதைப் பார்க்கலாம்.

## 1. சேமித்த செயல்பலன்கள்

ஒருவன் தன்னுடைய முற்பிறவிகளில் செய்த செயல் விளைவுகளின் அடிப்படையில், ஏற்கனவே செய்த அந்த செயல்களுக்கு உண்டான பாவ, புண்ணியப் பலன்களை அவன் இந்தப் பிறவியில் அனுபவித்துக் கழித்ததுக் கொண்டிருக்கும்போது, இப்போது கொண்டுவந்த இந்த உடலின் ஆயுட்காலம் முடிவடைந்து விட்டால், அவன் மீதி வைத்துள்ள பாக்கி பலன்களையும், இந்தப் பிறவியில் அவன் செயல்கள் பல செய்து புதியதாக சேர்த்துக் கொண்ட செயல் பலன்களையும் அவன் கட்டாயம் அனுபவிக்க வேண்டும் என்பதால், இந்தப் பிரபஞ்சம் அவைகளை தன்னுள் ஒட்டுமொத்தமாகச் சேகரித்து வைத்துக்கொண்டு, அடுத்து வரும் பிறவிகளில் அவனுக்கு அதை அனுபவிக்கக் கொடுக்கும்.

மேலும், இந்தப் பிரபஞ்சமானது அவனது பலன்களுக்கு ஏற்ப உடலைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து, அவனை மீண்டும் பிறக்கவைத்து, அவனிடம், தான் சேகரித்த பலன்களில் சிறிது மட்டுமே, இந்தப் பிறவியில் அனுபவிக்க கொடுத்துவிட்டு, மீதமுள்ள பலன்களை அடுத்த உடல் அவன் எடுப்பதற்காக தன்வசம் வைத்துக்கொள்கின்றது.

அதற்குக் காரணம், அவனது ஒரே பிறவியில் அவன் சேகரித்து வைத்துக் கொண்ட செயல் பலன்களை முழுவதுமாக அனுபவித்து தீர்க்க முடியாத அளவிற்கு, அவனது செயல் பலன்கள் நிறைய சேகரிக்கப்பட்டுள்ளது என்பதுதான் ஆகும்.

இவ்வாறு, அவனது பலன்களை இந்தப் பிரபஞ்சம் ஒட்டு மொத்தமாக தன்வசம் சேமித்து வைத்துக் கொண்டுள்ள செயல் பலன்களையே **“சேமித்த செயல்பலன்”** அல்லது **“சஞ்சித கர்மா”** என்று அழைக்கிறோம்.

## 2. செயல்படுகின்ற செயல்பலன்

ஒருவன் தன்னுடைய பல்வேறு மனிதப் பிறவிகளின் காரணமாக, ஏற்கனவே சேகரித்து வைத்துள்ள சேமித்த செயல் பலன்களில் இருந்து, அவைகளை முழுவதுமாக அனுபவித்து தீர்க்க முடியாமல் ஆகி, இப்பொழுது பிறந்துள்ள இந்தப் பிறவியில், அந்த **“சஞ்சித கர்மா"** பலன்களில் இருந்து சிலவற்றை மட்டும் கொண்டு வருகின்ற செயல்பலன்களை **“செயல்படுகின்ற செயல்பலன்”** அல்லது **“பிராரப்த கர்மா”** என்று அழைக்கிறோம்.

இப்போது, இந்தப் பிறவியில் செயல்படுகின்ற **“பிராரப்த கர்மா”** செயல்பலன்களை அனுபவிக்கக் கொண்டு வந்து, அதிலே, ஏற்கனவே எத்தகைய பாவ, புண்ணியங்கள் இருக்கின்றதோ? அதற்கேற்ற வாழ்க்கை முறை கிடைக்கப்பெற்று. இந்தப் பிறவியில் அனுபவித்து தீர்க்க வேண்டும்.

உதாரணமாக, அதிகப் பாவப் பலன்களையும், குறைவான புண்ணியப் பலன்களையும், பலன்களாக ஒருவன் இந்தப் பிறவியில் கொண்டு வந்தால், அவனது வாழ்க்கை, மிகுந்த துயரத்துடனும், அதிகமான போராட்டத்துடனும் காணப்படும். அவன் இந்தப் பிறவியில் என்ன நல்லது செய்தாலும், அவைகள், இனி வர இருக்கின்ற செயல் பலன்களில் சேர்ந்துக்கொண்டு, அவன் கொண்டுவந்த **செயல் படுகின்ற செயல்பலன்கள்** படியே நடைமுறைப்படுத்தும். அதனால்தான்,. அவன் இந்தப்பிறவியில் நல்லவனாக இருந்தும் துயரப்படுகின்றான்.

இதுப்போல, அதிகப் புண்ணியப் பலன்களையும், குறைவான பாவப் பலன்களையும், பலன்களாக ஒருவன் இந்தப் பிறவியில் கொண்டு வந்தால், அவனது வாழ்க்கை, மிகுந்த சந்தோஷத்துடனும், அதிகமான உற்சாகத்துடனும் காணப்படும்.

அவன் இந்தப் பிறவியில் என்ன கெட்டது செய்தாலும், அவைகள், இனி வர இருக்கின்ற செயல் பலன்களில் சேர்ந்துக்கொண்டு, அவன் கொண்டு வந்த **செயல்படுகின்ற செயல்பலன்கள்** படியே நடைமுறைப்படுத்தும். அதனால்தான் அவன் இந்தப் பிறவியில் கெட்டவனாக இருந்தும் சந்தோஷமாக இருக்கிறான்.

## 3. <u>வர இருக்கின்ற செயல்பலன்</u>

இவ்வாறு, இந்தப்பிறவியில், ஒருவன் இந்த பூமிக்கு பிராரப்த கரமா எனும், செயல்படுகின்ற செயல்பலனோடு வந்து அதை, அனுபவித்துக் கழித்துக் கொண்டிருந்தாலும், இனி இந்தப் பிறவியில், புதியதாக அவன் செய்யும் செயல்களுக்கு “**வர இருக்கின்ற செயல்பலன்**” அல்லது **“ஆகாமிய கர்மா"** என்று அழைக்கிறோம்.

இந்த ஆகாமிய கர்மா இப்போது பிறந்திருக்கின்ற பகுத்தறிவு அற்ற உயிரினங்களுக்கு கிடையாது. அவைகள் பூமிக்கு வருவதே தன் வசம் ஏற்கனவே மீதம் வைத்துள்ள பாவ, புண்ணிய பலன்களை கழிப்பதற்காக மட்டுமே ஆகும்.

அவைகள், தற்போதைய இந்த உடலை விட்டபிறகு, ஏற்கனவே பாக்கி வைத்துள்ள சேமித்த செயல் பலன்கள் என்பதிலிருந்து மீதியையும் கழிக்க, இன்னொரு உடல் எடுக்க வேண்டியது கட்டாயம் உள்ளது. அது அவைகளிடம் உள்ள சஞ்சித கர்மா எப்படியுள்ளது என்பதைப் பொறுத்து, அதற்கான உடல் உண்டாகும்..

அதாவது, அவைகள் ஏற்கனவே இதற்கு முன்பாக எடுத்த பல மனித உடல்களின் வாயிலாக, சேகரிக்கப்பட்ட சேமித்த செயல்பலன்கள் எனும் சஞ்சித கர்மா கையிருப்பு எவ்வளவு இருக்கின்றதோ? அவைகளை குறைக்க மீண்டும், மீண்டும் உடல் எடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

அதன்காரணமாகத்தான் சில மனிதர்கள் பிறக்கும் போதே உடல் ஊனமாகப் பிறக்கின்றார்கள். அவர்கள் இந்தப் பிறவியில் இப்போதுதான் பிறந்துள்ளார்கள். அவர்களிடம் இந்தப் பிறவிக்கான எந்தவிதமான பாவ, புண்ணியங்களும் இல்லை என்றாலும், அவர்கள் ஏற்கனவே முற்பிறவிகளில் செய்து சேகரித்து வைத்துள்ள கர்ம வினைகளைக் கொண்டு வருகின்றார்கள் என்று அறிய வேண்டும்.

# 7. செயல்பலன்களும், பிறவாமையும்

ஆக, எப்படித்தான் இந்த செயல்பலன்களை கழிப்பது, எத்தனைப் பிறவிகள், எத்தனை வகையான உடல்கள் என எப்படிப் பார்த்தாலும் அவைகள் தீராததுப் போல உள்ளதே என்றால், ஆம்! அவைகள் அவ்வளவு எளிதாக தீர்ந்துவிடாது.

அதற்கான காரணம், இந்த ஸ்தூல மற்றும் சூக்ஷும உடல்கள் உண்டாகக் காரணமாக இருக்கும், நம்முடைய காரணத் தேகம் அழியாமல், நிச்சயமாக இந்தப் பிறவிப் பெருங்கடலை கடப்பது என்பது முடியவே முடியாது.

சரி! இதற்கு என்னதான் வழி என்று கேட்டால், இந்தப் பிறவியை கடக்க விரும்புபவன், மற்ற உயிரினங்களுக்கு கொடுக்கப்படாத, மனிதனாகப் பிறப்பெடுத்த தனக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட பிரத்யேக பகுத்தறிவின் மூலம், தன்னைப் பற்றி அறிய முற்படவேண்டும்.

பகுத்தறிவின் முக்கியப் பலனே மனிதன் தன்னிடம் உள்ள அறியாமைகளை அகற்றி, அதற்கான ஆசைகளை அறிந்து, அவைகளில் இருந்து விடுபட வேண்டும்.

மேலும், தன்னிடம் தோன்றும் ஆசைகளில் நியாயமான ஆசை, நியாயமற்ற ஆசை, புத்திசாலித்தனமான ஆசை, முட்டாள்தனமான ஆசை என ஒவ்வொன்றையும் பகுத்தறிந்து, அதனை சரியாக முறைப்படுத்துவதற்காகத்தான் மனிதனுக்கு மட்டுமே ஆறாவது அறிவு கொடுக்கப்பட்டுள்ளது.

அதைக் கொண்டு, எது நிலையானது? எது நிலையற்றது? என்று பகுத்து அறிந்து, அதில் நித்யமான ஆன்மாவை அறிய முற்பட வேண்டும். அப்போது மட்டும்தான் இந்த பிறவிக்கான மூலம் எனும் சஞ்சித கர்மாவாகிய காரணத் தேகத்தை அழிக்க முடியும்.

குழந்தையாக இருக்கும் போது பொம்மை, விளையாட்டு சாமான்கள் என்று ஆசைப் படுகிறோம், அப்புறம் புது புது ஆடைகள், பேனா, புத்தகம், என்று போகிறது ஆசை, வயது வரும் போது எதிர் பாலின் மேல் ஆசை, அப்புறம் வேலை, பணம், அதிகாரம், சொத்து, என்று ஆசைக் கொடி படர்கிறது, பின் நல்ல உடல் ஆரோக்கியம், படுத்தால் தூக்கம், என்று ஆசையின் அளவு மாறுபடுகின்றது. நாள் ஆக ஆக இறைவன், சொர்க்கம் என்று ஆசை தடம் மாறுகின்றது. இப்படி கிளை விட்டு கிளை தாவும் மனம், ஒரு குரங்குப்போல தாவிக் கொண்டே இருக்கின்றது.

இப்படி இந்த மனக் குரங்கை நோக்கி, எந்த ஆசையும் இல்லாமல் இருக்க ஆசைப்படுகிறார் தாயுமானவர்.

ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
ஆளினுங் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவர் எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும் நான் நான்எனக் குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகி'ன்ற
பரிபூர ணானந்தமே.

பெரும்பாலான மனிதர்களின் துயரத்திற்குக் காரணம், ஆசையே. ஆசை என்பது அனுபத்தை அடைவதற்கான ஏக்கம்.

அவன் அடைந்த அனுபவத்திற்கு கிடைத்த பலன் அவன் செய்த செயல்.

செயல் விளைவுக்கு காரணம் ஆசை.

இது ஒரு தொடர் சக்கரம்.

இதை நிறுத்த வேண்டுமென்றால், விவேகம் தேவை.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், ஒருவனது அறிவு வளர்ச்சியைப் பொருத்தே, அவனது ஆசை இருக்கும், அவனது ஆசையைப் பொருத்தே செயல்கள் இருக்கும், அவனவனது செயல்களைப் பொருத்தே அவனது அனுபவம் இருக்கும், அவனது அனுபவத்தைப் பொருத்தே அவன் இருப்பான்.

ஒருவன் தன்னைப்பற்றி அறிய முடியாமல் போனதற்கு முக்கியக் காரணம், ஆசையைப் பற்றிய அறியாமையே ஆகும். மனிதன் தன்னுடைய நியாயமான ஆசைகளை விடுத்து, பேராசைப் படுதலே, அவன் அவனைப்பற்றி முழுமையாக அறியமுடியாமல் போகின்றது.

எவன் ஒருவன் தன்னுடைய ஆறாவது அறிவை பயன் படுத்தி தன்னுடைய எண்ணங்களைப் பரிசோதிக்கின் றானோ, அவனே வெற்றியாளன். ஆசையினால் தேவையற்ற எண்ணங்கள் மனதில் உருவாகி, பிறகு மனம் எதை விரும்புகின்றதோ? அதை செயல்படுத்துவது என்பதுதான் நடைமுறையில் காணப்படும் உண்மை.

ஆகவே, மனதினை சரியாக பழக்கப்படுத்த எண்ணங்கள் தூய்மையாக இருக்க வேண்டும். எண்ணங்கள் தூய்மையாக, தேவையற்ற ஆசைகளை அவசியம் விட வேண்டும்.

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. – திருக்குறள்

குறள் விளக்கம்:

எல்லா உயிர்களுக்கும், எக்காலத்திலும் ஒழியாமல் வருகின்ற பிறவித்துன்பத்தை உண்டாக்கும் விதைதான் ஆசை என்கின்றார் திருவள்ளுவர்.

ஆசைகளை விட்டவனே, ஆத்மாவை அறிந்தவன் ஆவான். ஆத்மாவை அறிந்தவனே தன்னை அறிந்தவன் ஆவான்.

தன்னை அறிந்தவனே, இந்த பாவ, புண்ணிய பலன்களை முழுவதுமாக முடிக்க முடியும். அவ்வாறு பாவ, புண்ணியம் என்ற இந்த இரண்டின் பலன்களை முடித்தவன் எவனோ, அவனே இனி பிறவா நிலை அடைந்து அந்த பிரபஞ்சத்துடன் இணைவான். தன்னை அறியாத மூடன் மீண்டும், மீண்டும் பிறப்பான்.

"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்
பின்னை வினையை பிடித்து பிசைவர்
சென்னியில் வைத்த சிவனருளாலே"

எனச் சொல்கிறார் திருமூலர்.

இதையே சிவவாக்கியார் பின்வருமாறு கூறுகின்றார்.

என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே!
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்;
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ?
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டெனே!

இப்படி எத்தனையோ மகான்கள் இந்த பூமியில் அவதரித்து, மனிதனை மகத்தானவனாக மாற்ற எவ்வளவோ வழிமுறைகளைக் கூறினர்.

ஔவையார் இந்த மானிடப் பிறவியின் பெருமையை மிக அருமையாகக் கூறுகின்றார்.

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது!
அதனினும் அரிது கூன், குருடு,
செவிடு, பேடு நீக்கி பிறத்தல் அரிது!
அதனினும் அரிது ஞானமும்,
கல்வியும் நயத்தல் அரிது!
அதனினும் அரிது தானமும், தவமும் தான்
செய்தல் அரிது!

தானமும் தவமும் செய்தால் வானவர் நாடு வழி திறந்திடுமே!
ஔவையார் அருளிய ஞான அமுத வாக்கு இது.

இந்த மனிதப் பிறவி கிடைப்பது அவ்வளவு எளிதல்ல என்றும், இந்த மனிதப் பிறவியினால் மட்டுமே பிறவாமை என்ற அந்த "**பிரம்ம நிலை**" அடையமுடியும் என்றும் அறிவுறை கூறுகிறார்கள்.

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் கிடைத்தற்கரிய இந்த மனித உடல் கிடைத்ததை சரியாக பயன் படுத்திக் கொண்டு, இதன் சிறப்பம்சமான ஆறாவது அறிவை கொண்டு பகுத்தறிந்து, இந்த பிரபஞ்சத்தை உணர்ந்து, தானும், இந்த பிரபஞ்சமும் வேறில்லை என்று அறிந்து கொள்கின்றானோ? அவன் மட்டுமே தன்னுடைய தனித்துவத்தை இழக்கின்றான். அகங்காரத்தை அழிக்கின்றான். அன்றே அவன் "**அவனின்றி ஓர் அணுவும் அசையாது**" என்ற நிலை கொள்கின்றான்.

இனி, அவனது செயல்பலன்கள் அனைத்தும், என் செயலாவது ஒன்றுமில்லை! எல்லாம் அவன் செயலே! என்று அனைத்து செயல் பலன்களையும் பகவானுக்கு அர்பணித்து விடுகின்றான். இனி புதிய செயல்பலன்கள் என்றுமே அவனுக்கு சேராது. ஏற்கனவே, சேகரிக்கப்பட்ட செயல் பலன்களும், அவன் அடைந்த ஆன்ம ஞானத்தினால், சுட்டெறிக்கப்படுகின்றன.

இதனால், அவனது ஒட்டுமொத்த பாவ, புண்ணியங்கள் அனைத்தும் முற்றிலுமாகக் கரைந்து, அந்த சாதாரண பாமரன், பரமன் ஆகின்றான். இனி அவன் பிறக்கவும் மாட்டான், இறக்கவும் மாட்டான். அவனே ஞானி, அவனே பிரஹ்மம்.

ஓம் தத் சத்!


செயல்
இரகசியம்
ப்ரக்ஞன்